விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 188 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 11 புதன்கிழமை (25.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## 2ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்ட 'அணையா விளக்கு' தொடர் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரிய 'அணையா விளக்கு' போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து இடம்பெற்றது.



(02ஆம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேல் – ஈரான் போர் நிறுத்தத்துக்கு இணக்கம்

(வோசிங்டன் டி.சி)

இஸ்ரேலும் ஈரானும் போர் நிறுத்தத்திற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

15ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா உயர்ஸ்தானிகர் இன்று யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாணம் விஜயத்தின்

02ஆம் பக்கம் பார்க்க

## மெழுகுவர்த்தி ஏற்றியபோது தீக்காயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மெழுகுவர்த்தி ஏற்றியபோது தீக்காயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அம்பலவாணர் நாகேந்திரம்

15ஆம் பக்கம் பார்க்க

## தமிழினப் படுகொலை சர்வதேச விசாரணைக்கு வழி ஏற்படுத்துங்கள்

### மனித உரிமை ஆணையாளரிடம் சிறீதரன் கோரிக்கை

(கொழும்பு)

தமிழினப் படுகொலை தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு வழி ஏற்படுத்தித் தாருங்கள் என ஐ.நா மனித உரிமை ஆணையாளர் வோல்கர் டேர்க்கிடம் சிறீதரன் எம்.பி நேரில் கோரிக்கை முன்வைத்துள்ளார்.



(16ஆம் பக்கம் பார்க்க)

## உறவுகளைச் சந்தித்த ஐ.நா ஆணையாளர்

### மகஜரும் கையளிப்பு



16ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமைகள் மீதான முன்னேற்றம் குறித்து விளக்கினேன்

### ஐ.நா உயர்ஸ்தானிகருடனான சந்திப்பு தொடர்பில் அமைச்சர் விஜித ஹேரத்

(கொழும்பு)

மனித உரிமைகள் மீதான முன்னேற்றம் குறித்து ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரிடம் விளக்கினேன் என அமைச்சர் விஜித



15ஆம் பக்கம் பார்க்க

## ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மன்னார் நகர சபையில் ஆட்சி

### தவிசாளராக டானியல் வசந்தன் தெரிவு

(மன்னார்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மன்னார் நகர சபையில் ஆட்சியமைத்ததோடு அதன் தவிசாளராக டானியல் வசந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



15ஆம் பக்கம் பார்க்க

## ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாந்தை மேற்கில் ஆட்சி

### தவிசாளரானார் ஞா.பிரேம்குமார்

(மன்னார்)

மாந்தை மேற்குப் பிரதேச சபையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்ததோடு அதன் தவிசாளராக ஞானப்பிரகாசம்



16ஆம் பக்கம் பார்க்க

## பண்டத்தரிப்பில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு சாந்தைப் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

02ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் பிரதேச சபை மக்கள் காங்கிரஸ் வசம்

### தவிசாளரானார் ஏ.ஜே.எம்.ஜப்ரான்

(மன்னார்)

மன்னார் பிரதேச சபையை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி கைப்பற்றியதோடு அதன் தவிசாளராக ஏ.ஜே.எம்.ஜப்ரான்



15ஆம் பக்கம் பார்க்க


**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிகளை விடுவிக்கக் கோரி

# வலி.வடக்கில் 4ஆவது நாளாகப் போராட்டம்





யாழ்ப்பாணம் வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள 2ஆயிரத்து 400 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி நேற்று செவ்வாய்க்கிழமை நான்காம் நாளாக காணி உறுதிகளுடன் உரிமையாளர்கள் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

நான்காவது நாளான நேற்றைய தினம் காணிக்கான தமது உறுதிகளை எடுத்து வந்து அதனை காண்பித்து போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

காணிகளை விடுவிக்க கோரி கடந்த சனிக்கிழமை மயிலிட்டிச் சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் அப்பகுதியிலேயே உணவு சமைத்து அருந்தி தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,33)

# மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நீதி அமைச்சருடன் கலந்துரையாடல்



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் வோல்கர் டர்க் மற்றும் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார ஆகியோருக்கு இடையேயான சந்திப்பு கொழும்பில் நேற்று செவ்வாய்க் கிழமை (24) நடைபெற்றது.

பிரதம நீதியரசர், ஜனாதிபதி வழக்கறிஞர் முர்து பெர்ணாந்து, சட்டமா அதிபர், ஜனாதிபதி வழக்கறிஞர் பரிந்த ரணசிங்க, மேலதிக சொலி சிட்டர் ஜெனரல், ஜனாதிபதி வழக்கறிஞர் நெரின் புல்லே, இலங்கையில் ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆண்ட்ரே ஃபிராஞ்ச் மற்றும் ஐ.நா. அதிகாரிகள் குழுவும் இதில் கலந்து கொண்டனர். (ம-7)

## 'அணையா...

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைக்குழிக்குச் சர்வதேச விசாரணை கோரி மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில் "அணையா விளக்கு" எனும் மூன்று நாள் தொடர் போராட்டம் யாழ். நல்லூர் வளைவுக்கு அருகில் நேற்று முன்தினம் காலை ஆரம்பமானது.

போராட்டத்தின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்றுக் காலை 10 மணியளவில் மலர் அஞ்சலியுடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து சர்வ மதத்தலைவர்களின் நீதியுரையும் இடம்பெற்றது.

நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் வருகை தந்து இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தார்கள். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் கட்சியின் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக இரவு வேளைகளில் கதை படித்தல், ஆவணப்பட திரையிடல், தெரு வெளி நாடகம் என்பன இடம் பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இறுதித் தினமான இன்று நடைபெறவுள்ள கவனயீர்ப்புப் போராட்டத்தில் வடக்கு, கிழக்கில் இருந்து பெருமளவிலானோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## ஐ.நா...

போது செம்மணி மனிதப் புதைகுழியை அவர் பார்வையிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை வடக்கிலுள்ள தமிழ்க் கட்சி உறுப்பினர்களை மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் சந்தித்துக் கலந்துரையாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம-7)


## குடும்பஸ்தர்...

இதில் அதே இடத்தைச் சேர்ந்த 33 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டாராவார்.

சடலம் தெல்லிப்பளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில்,

யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 1935 . 09 . 25

உதிர்வு 2025 . 05 . 26

கடந்த 26.05.2025 திங்கட்கிழமை அன்று அமரத்துவம் அடைந்த எமது உறவினர்

அமரர் கந்தையா தம்பிஜயா

(தும்பிஜயா அன்கோ - யாழ்ப்பாணம்)

அவர்களின் 31 ஆம் நாள் நினைவுதினம் 25.06.2025 இன்று புதன்கிழமை கொழும்பில் இடம்பெறும்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(46337)

இங்ஙனம் :
உறவினர்களும்
வெளிநாட்டில் உள்ள அனைத்து உறவினர்களும்

# தீக்காயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் உயிரிழப்பு

## யாழ்.நல்லிணக்கபுரத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம் நல்லிணக்கபுரத்தில் தீக்காயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் நல்லிணக்கபுரம் கீரிமலை வீதியைச் சேர்ந்த 30 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

மனைவியைப் பிரிந்து வாழ்ந்து வந்த அவர் மனைவியின் தந்தை வீட்டிற்கு கடந்த 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு சென்று தனக்குத்தானே தீ மூட்டியுள்ளார்.

உடனடியாக தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை(24) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

இது தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

கண்ணீர் அஞ்சலி



கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்மன் தேவஸ்தான முன்னாள் நிர்வாக சபையின் செயலாளரும் முன்னாள் திருப்பணிச்சபையின் செயலாளரும் மற்றும் இளைஞர் கழக போசகருமாகிய ம.சயந்தரூபன் அவர்களின் அன்புத்தாயார்

(46361)

அமரர்
தெய்வநாயகி மகேந்திரராஜா

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 01.02.1944 மறைவு 18.06.2025

பிரிவால் துயருறும்
கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்மன் தேவஸ்தான நிர்வாக சபையினர் மற்றும் இளைஞர் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் தாக்குதலால்

# உலக பொருளாதாரத்திற்கு ஆபத்து!

## சர்வதேச நாணயநிதியம்

(வோஷிங்டன்)

**ஈரானின் அணு உலைகள் மீதான அமெரிக்காவின் தாக்குதல் மற்றுமொரு சுற்று பொருளாதார ஸ்திரமின்மையை ஏற்படுத்தியுள்ளது என தெரிவித்துள்ள சர்வதேச நாணயநிதியம் அமெரிக்கா போன்ற பெரும் பொருளாதார நாடுகளிற்கும் இதுஅச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது என குறிப்பிட்டுள்ளது.**

ஏற்கனவே மிகவும் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்ட சர்வதேச பொருளாதார நிலையை வார இறுதித் தாக்குதல் மேலும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது என சர்வதேச நாணயநிதியத்தின் கிறிஸ்டலினா ஜியோஜிவா தெரிவித்துள்ளார்.

எண்ணெய் வளம் மிக்க மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதலால் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு விலைகள் மேலும் உயரும் தாக்கத்தையும் உலகளாவிய எரிசக்தி விநியோகத்தில் ஏதேனும் இடையூறு ஏற்படுவதையும் கவனித்து வருவதாக தெரிவித்துள்ளார். இந்த ஆண்டு அமெரிக்கா மந்தநிலையைத் தவிர்க்க அதிக வாய்ப்பு உள்ளது. ஆனால் தயவுசெய்து நிலைமையை மோசமானதாக்கவேண்டாம் என அவர் தெரிவித்துள்ளார்.




"நிச்சயமற்ற தன்மை அதிகமாக இருந்தால் அது வணிகத்திற்கு மோசமாக இருக்கும். நிச்சயமற்ற தன்மை இருக்கும் போது முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதில்லை. நுகர்வோர் நுகர்வதில்லை அது வளர்ச்சி வாய்ப்புகளைக் குறைக்கிறது" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## யாசகம் பெற்ற 21 குழந்தைகள்

### பொலிஸ் காவலில்



(கொழும்பு)

யாசகம் பெற்ற 21 குழந்தைகள் அடையாளம் காணப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கைப் பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையகத்துடன் , இலங்கை பொலிஸ் பிரிவு இணைந்து நடத்திய சோதனை நடவடிக்கைகளிலேயே 21 குழந்தைகள் அடையாளம் காணப்பட்டனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, அநுராதபுரம், இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை உள்ளிட்ட பல மாவட்டங்களில் உள்ள குழந்தைகளே இவ்வாறு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (நி)

## 119 ஐ தவறாகப் பயன்படுத்துவதை தவிர்க்கவும் - பொலிஸ் ஊடகப்பிரிவு

(கொழும்பு)

அவசரத் தொலைபேசி இலக்கமான 119 இலக்கத்தை தவறாகப் பயன்படுத்தி தவறான முறைப்பாடுகளை அளிப்பவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது அவசர காலங்களில் பொலிஸ் 119 என்ற அவசரத் தொலைபேசி இலக்கத்திற்கு அணுகும் திறனைக் குறைக்கிறது.

பொதுமக்கள் ஏதேனும் பேரிடர் ஏற்பட்டாலோ அல்லது பொலிஸ் அதிகாரிகளின் உடனடி உதவி தேவைப்பட்டால் உடனடியாக பொலிஸ் அதிகாரிகளை பணியமர்த்தும் நோக்கில் 2004 ஆம் ஆண்டு பொலிஸ்துறை அவசர தொலைபேசி எண் 119 அறிமுகப்படுத்தப்பட்டது.

இருப்பினும், இந்தத் தொலைபேசி இலக்கத்திற்கு அண்மையில் வந்த அழைப்புகளைப் பொறுத்தவரை, போலி முறைப்பாடுகளை அளிப்பதன் மூலமும், பொலிஸாரினால் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய முறைப்பாடுகளைத் தவிர, பிற உடனடி சேவைகளுக்கு அனுப்ப வேண்டிய முறைப்பாடுகளை அளிப்பதன் மூலமும் இந்த சேவை தவறாகப் பயன்படுத்தப்படும் சம்பவங்கள் காணப்படுகின்றன.

இதுபோன்ற பொய்யான முறைப்பாடுகள் பதிவு செய்யும் நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது. (நி)

உ
சிவமயம்

விவேகானந்த சபை, கொழும்பு
VIVEKANANDA SOCIETY, COLOMBO
[ 123 வருடங்கள் இடைவிடாத சைவ சமயப் பணியில்- (1902-2025) ]
ஏற்பாட்டில் நடைபெறும் சைவ சமய ஆசிரியர்களுக்கான இலவச

ஆசிரிய வாண்மை விருத்திச் செயலமர்வு-2025

இடம் : யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பிரதான மண்டபம்
காலம் : 28.06.2025 சனிக்கிழமை
இடம் : யா/நெல்லியடி மத்திய கல்லூரி
காலம் : 29.06.2025 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை
(பங்குபற்றுனர்கள்- யாழ், வலிகாமம், தீவகம், தென்மராட்சி, வடமராட்சி வலயங்களைச் சேர்ந்த 500இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள்)

தலைமை
கலாநிதி எம்.ஆர். ராஜ்மோகன், சிரேஷ்ட சட்டத்தரணி
தலைவர், விவேகானந்த சபை,
தலைவர், உலக சைவ ஆராய்ச்சி நிறுவனம்

வளவாளர்கள்
கலாநிதி. பொன் ஜெயரூபன்
விரிவுரையாளர்,சமயங்கள் மற்றும் விழுமியங்கள்
கல்வித்துறை தேசிய கல்வி நிறுவனம், இலங்கை
கலாநிதி பா. தனபாலன்
உப பீடாதிபதி, தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்
திரு. K.R. கமலநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.

விவேகானந்த சபையினால் நாடு தழுவிய ரீதியில் இலவசமாக நடைபெற்று வரும் ஆசிரிய வாண்மை விருத்தி செயலமர்வில் ஏற்கனவே பதிவு செய்த ஆசிரியர்கள் நேர காலத்துடன் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

கலாநிதி எம். ஆர். ராஜ்மோகன்
தலைவர், விவேகானந்த சபை

திரு சு. சிவசண்முகநாதன்
பொதுச்செயலாளர், விவேகானந்த சபை

ஒழுங்கமைப்பு : திரு. எஸ். சந்திரசேகர்
(உப தலைவர், கொழும்பு விவேகானந்த சபை - 077 7897 372)

• பங்குபற்றுனர்கள் அனைவருக்கும் விவேகானந்த சபையினால் சான்றிதழ் வழங்கப்படும்.
• பங்குபற்றுனர்களுக்கு உணவு மற்றும் தேநீர், சிற்றுண்டி வழங்கப்படும்.
(1259)

ராஜ் ஜுவல்லர்ஸ்
நகை அடகுபிடிக்கும் சேவை
வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது
1 பவுண் 22 கரட்டிற்கு
2,20,000/=



அடகுக்காலம் ஒருவருடம்
இல.59, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி சந்தைக்கு அருகில்
021 221 7287 / 076636 1238
(4634)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## 70 ஆண்டுகளுக்குப் பிறகு டெஸ்ட் தொடரில் வரலாற்றுச் சாதனை படைத்த இந்திய அணி



இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி சார்பில் ஐந்து சதங்கள் அடிக்கப்பட்டன. இது மாபெரும் சாதனையாக மாறி இருக்கிறது. 70 ஆண்டுகளுக்குப் பிறகு வெளிநாட்டு டெஸ்ட் போட்டியில் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டு இருக்கிறது. மேலும், இந்திய அணி சார்பில் முதன் முறையாக இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றன. இந்தத் தொடரின் முதல் போட்டி ஹெடிங்லே மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 471 ஓட்டங்கள் எடுத்தது. அப்போது இந்திய அணியில் ஜெய்ஸ்வால் 101 ஓட்டங்களும், சுப்மன் கில் 147 ஓட்டங்களும், ரிஷப் பண்ட் 134 ஓட்டங்களும் எடுத்திருந்தனர். அடுத்து இங்கிலாந்து அணி 465 ஓட்டங்கள் எடுத்தது.

அதன் பிறகு இரண்டாவது இன்னிங்ஸில் ஆடிய இந்திய அணியில் கே.எல். ராகுல் மற்றும் ரிஷப் பண்ட் ஆகியோர் சதம் அடித்தனர். ரிஷப் பண்ட் இந்தப் போட்டியின் இரண்டு இன்னிங்ஸ்களிலும் சதம் அடித்து அசத்தினார். அவர் 118 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். கே.எல். ராகுல் சதம் அடித்து தொடர்ந்து ஓட்டம் சேர்த்தார். இதை அடுத்து, டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி முதன்முறையாக ஒரே போட்டியில் ஐந்து சதங்களைப் பதிவு செய்து அசத்தியது.

இதுவரை உலக அளவில் ஆறு அணிகள் மட்டுமே இந்தச் சாதனையை செய்துள்ளன. ஏழாவதாக இந்திய அணி இந்தச் சாதனையை செய்துள்ளது. அதிலும் வெளிநாட்டு மண்ணில் ஐந்து சதங்களை அடித்த ஒரே அணியாக இதுவரை அவுஸ்திரேலியா மட்டுமே இருந்தது. 1955 ஆம் ஆண்டு மேற்கிந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி சார்பில் ஐந்து சதங்கள் அடிக்கப்பட்டிருந்தன.

அதன் பிறகு எந்த அணியும் வெளிநாட்டு மண்ணில் 5 சதங்களை அடிக்கவில்லை. தற்போது இந்திய அணி இங்கிலாந்து மண்ணில் ஐந்து சதங்களை அடித்து அவுஸ்திரேலியாவின் அந்தச் சாதனையை மீண்டும் நிகழ்த்தி இருக்கிறது. 70 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தச் சாதனை மீண்டும் நிகழ்த்தப்பட்டு இருக்கிறது.

மேலும், இந்தப் போட்டியில் ரிஷப் பண்ட் இரண்டு இன்னிங்ஸ்களிலும் சதம் அடித்தார். இதுவரை ஆறு இந்திய பட்ஸ்மேன்கள் ஒரு டெஸ்ட் போட்டியின் இரண்டு இன்னிங்ஸ்களிலும் சதம் அடித்து சாதனை படைத்திருந்தனர். அந்தப் பட்டியலில் ஏழாவதாக ரிஷப் பண்ட் சேர்ந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

## இலங்கை - பங்களாதேஷ் டெஸ்ட் தொடர் இலவசமாகப் பார்வையிட அனுமதி


பங்களாதேஷுக்கு எதிராக கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ள 2ஆவது டெஸ்ட் போட்டியை இலவசமாக பார்வையிட முடியும் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஐ.சி.சி.இன் 2025-2027 பருவகாலத்துக்கான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் ஓர் அங்கமாக இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் காலியில் நடைபெற்ற முதல் போட்டி சமநிலையில் நிறைவுக்கு வந்தது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையில் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெறவுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டியை ரசிகர்கள் டிக்கெட்டின்றி இலவசமாக மைதானத்திற்குச் சென்று பார்வையிட முடியும் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதன்படி, ரசிகர்கள் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இப்போட்டியை இலவசமாக கண்டு களிக்க, மைதானத்தின் உள்ள 3 மற்றும் 4 ஆம் இலக்க நுழைவாயில்கள் வழியாக உள்ளே வரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## சர்வதேச ஒலிம்பிக் குழுத் தலைவராக பொறுப்பேற்றார் கிறிஸ்டி கவன்ட்ரி




சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவராக 12 ஆண்டுகள் பணியாற்றிய ஜேர்மனியைச் சேர்ந்த தாமஸ் பாச் விலகியதையடுத்து புதிய தலைவரை தேர்ந்தெடுக்க கடந்த மார்ச் மாதம் தேர்தல் நடந்தது. இதில் முன்னாள் நீச்சல் வீராங்கனையான கிறிஸ்டி கவன்ட்ரி அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

131 ஆண்டுகால ஒலிம்பிக் குழு வரலாற்றில், சர்வதேச விளையாட்டு அமைப்பில் அதிகாரமிக்க இந்த அரியணையில் அமரும் முதல் பெண் மற்றும் முதல் ஆபிரிக்க நாட்டவர் என்ற மகத்தான பெருமையை 41 வயதான கவன்ட்ரி பெற்றார்.

இந்த நிலையில் சர்வதேச ஒலிம்பிக் அமைப்பு உருவாக்கப்பட்ட தினமான நேற்று முன்தினம் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவராக கவுன்ட்ரி முறைப்படி பொறுப்பு ஏற்றுக் கொண்டார். சுவிட்சர்லாந்தின் லாசானே நகரில் நடந்த விழாவில் கோல்டன் சாவியை முன்னாள் தலைவர் தாமஸ் பாச் அவரிடம் வழங்கினார்.

சர்வதேச ஒலிம்பிக் குழு சிறந்தவரின் கைக்கு சென்று இருப்பதாகவும், அவர் நம்பிக்கையுடனும், நேர்மையுடனும் செயற்படுவார் என்றும் தாமஸ் பாச் கூறினார். (3)

## கால்பந்து மைதான மேற்கூரை விழுந்து பார்வையாளர்கள் மூவர் பரிதாபமாகப் பலி



அல்ஜீரியாவில் நடைபெற்ற கால்பந்து போட்டியின் போது மைதானத்தின் உள்ள கட்டடத்தின் ஒரு பகுதி மேற்கூரை திடீரென இடிந்து விழுந்ததில் 3 பேர் உயிரிழந்ததுடன் 81 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அண்மையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் உள்ளூர் அணியான எம்.சி. அல்ஜர் அணி வெற்றிபெற்று சம்பியன் பட்டம் வென்றது. ஆட்டம் நிறைவடைந்து ரசிகர்கள் வெற்றிக்கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த போது ஆட்டம் நடைபெற்ற மைதானத்தில் உள்ள கட்டடத்தின் ஒரு பகுதி மேற்கூரை திடீரென இடிந்து விழுந்தது. இந்த சம்பவத்தில் மைதான இருக்கைகளில் அமர்ந்திருந்த ரசிகர்கள் பலர் படுகாயமடைந்தனர். உடனடியாக அனைவரும் மீட்கப்பட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால், இந்த விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். 81 பேர் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணையாவிளக்கு போராட்டத்திற்கு ஆதரவாக மட்டக்களப்பில் போராட்டம்




(மட்டக்களப்பு)

யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் நடைபெறும் அணையாவிளக்கு போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட உகந்தாச்சிமட பாலத்திற்கு அருகாமையில் போராட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் மாலை ஆரம்பமான குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி கோரியும் சர்வதேசக் கண்காணிப்புடன் மனிதப் புதைகுழிகளின் அகழ்வை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியும் பல்வேறு சுலோகங்களை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.



குறித்த போராட்டத்தில் தீப்பந்தங்களை ஏந்தியவாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்பின் பிரதி நிதிகள், பொதுமக்கள் என பல தரப்பினர் கலந்து கொண்டனர். (நி)

# ஐ.நா ஆராய்ச்சி கப்பலுக்கு அனுமதி வழங்கியது இலங்கை



(கொழும்பு)

இலங்கை கடற்பகுதியில் ஆராய்ச்சி நடவடிக்கைகளைத் தொடங்க உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் ஆராய்ச்சிக் கப்பலுக்கு இலங்கை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தக் கப்பல் ஓகஸ்ட் 15 முதல் 20 வரை கடல் பகுதியில் ஆராய்ச்சி நடத்தவுள்ளதாகக் கூறப்படுகிறது.

மீன்வள அமைச்சகத்தால் கோரப்பட்டு, ஐ.நா வால் ஒருங்கிணைக்கப்பட்ட இந்தக் கப்பலின் பயன்பாடு, காலநிலை தொடர்பான நிரலாக்கத்தை ஆதரிப்பதற்கும், முக்கியமான கடல்சார் தரவுகளை வழங்குவதற்கும் நோக்கமாக உள்ளது.

வெளிநாட்டு ஆராய்ச்சிக் கப்பல்களுக்கான ஒரு வருடத் தடைக்காலம் டிசெம்பர் 2024 இல் காலாவதியானது. அப்போதிருந்து, அரசாங்கம் புதிய தரநிலை இயக்க நடைமுறைகளை வரைவதற்கு அமைச்சகங்களுக்கு இடையேயான குழுவை நியமித்து, ஒப்புதல்களை தாமதப்படுத்தியுள்ளது.

இந்த ரத்து இலங்கைக்கு மில்லியனுக்கும் அதிகமான ஆதரவை இழக்க நேரிடும் என்றும், எதிர்கால பசுமை காலநிலை நிதி முயற்சிகளைப் பாதிக் கலாம் என்றும் ஐ.நா அதிகாரிகள் எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது . (நி)

# செவ்வந்தி தப்பிச் செல்லவில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பாதாள உலகக் குழுத் தலைவர் கனேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கில் தேடப்படும் பெண் சந்தேகநபரான இஷாரா செவ்வந்தி இலங்கையிலிருந்து தப்பிச் செல்லவில்லை என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றின் போது பேசிய அமைச்சர் விஜேபால, இதுவரை சேகரிக்கப்பட்ட தகவல்கள் அவர் நாட்டை விட்டு ஓடிவிட்ட தாக சுட்டிக்காட்டப்பட வில்லை என்று கூறினார்.

இந்த விவகாரம் தொடர்பாக நடைபெற்று வரும் விசாரணைகளின் போது, கொலை தொடர்பான தகவல்கள் மற்ற சந்தேகநபர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கொலை தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறை முறையான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி)

# மாதாந்த செலவினம் அதிகரிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

தனிநபர் ஒருவர் தமது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மாதாந்தம் குறைந்தபட்சம் 16342 ரூபா தேவைப்படுவதாக தெரியவந்துள்ளது.

2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான உத்தியோகபூர்வ வறுமைக்கோடு தரவுகளை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அதன்மூலமாக குறித்த விடயம் தெரியவந்துள்ளது. தேசிய மட்டத்தில் இந்த தொகை அறிவிக்கப்பட்டிருந்தாலும், மாவட்டங்களுக்கமைய இந்த தொகையில் மாற்றம் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரவுகளின் அடிப்படையில், 25 மாவட்டங்களில் அதிக செலவினத்தைக் கொண்ட மாவட்டமாக கொழும்பு மாவட்டம் அமைந்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் தனிநபரின் மாதாந்த செலவு 17,625 ரூபாவாக காணப்படுகின்றது.

குறைந்த செலவினத்தைக் கொண்ட மாவட்டமாக மொனராகலை மாவட்டம் பதிவாகியுள்ளது.

மொனராகலை மாவட்டத்தில் தனி நபர் ஒருவர் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, மாதாந்தம் 16,626 ரூபாய் தேவைப்படுவதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# இராசிபலன்

25.06.2025
ஆனி 11, புதன்கிழமை
அமாவாசை பிற்பகல் 5.05 மணிவரை

மிருகசீரிடம் முற்பகல் 11.46 மணிவரை
சுப நேரம் 4.25-5.55 மணிவரை
இராகுகாலம் 11.55-1.25மணிவரை

அமாவாசை விரதம்
சந்திராஷ்டமம்
விசாகம், அனுசம்

**வளவன்**




வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், செலவில் சிக்கனம் காட்டி சேமிப்பைப் பெருக்க முற்படுவீர்கள், தொலைபேசி வழியில் வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம்.




தூரத்து உறவினர்களின் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, காரிய அலைச்சல்கள் ஏற்படலாம்.




தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தடைகள் விலகி தன வரவு சேரும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.




உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.




அலங்காரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நிதி நிலை உயரும் நாள், பொதுவாழ்வில் புகழ்கூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம்.




பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வரவைக் காட்டிலும் விரயங்கள் மேலோங்கும் நாள், உடல்நலனில் கவனம் தேவை, கௌரவக்குறைவு ஏற்படலாம்.




புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.




குடும்ப செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று இடம்பெறலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.




கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், அன்பு நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு, கனவுப்பலிதமுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.





அரச வழியில் அனுகூலமுண்டு, வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொது வாழ்வில் புகழ் கூடும்.




ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவு கைக்குக் கிடைக்கலாம், தூர தேசச் செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

உண்மையைச்சொல்வதற்கு நினைவாற்றல் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரி அணையாவிளக்குப் போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை இரண்டாம் நாளாகவும் இடம் பெற்றது. இந் நிகழ்வில் சமயத்தலைவர்கள், அரசியல் தலைவர்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். செம்மணி மண்ணில் புதையுண்டு போன உறவுகளுக்கு நீதி வேண்டிய போராட்டமாக அணையாவிளக்கு என்ற பெயரில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. (படங்கள்- சிவசாந்தன்)

# சட்டவிரோத மணல் அகழ்வு; சாரதிகள் மூவர் கைது

(சாவகச்சேரி)

அனுமதிப் பத்திரத்தில் மோசடி மேற்கொண்டு சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று டிப்பர் வாகன சாரதிகளை நேற்று செவ்வாய்க்கிழமை காலை சாவகச்சேரிப் பொலிஸார் தனங்கிளப்புப் பகுதியில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

தரை மணல் ஏற்ற வழங்கிய அனுமதிப் பத்திரத்தில் மாற்றம் செய்து ஆற்று மணல் ஏற்றி வந்த நிலையிலேயே பொலிஸார் மூன்று டிப்பர் வாகனங்களையும் அதன் சாரதிகளையும் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினரே மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

கைதான சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-30)

# அபிவிருத்திக் குழுக்கூட்டம்

(பனிச்சன்குளம்)

வடமராட்சி கிழக்கு பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று காலை 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது.

இக்கூட்டமானது பாராளுன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்திக்குழு தலைவருமான இளங்குமரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிலையில் பிரதேச அபிவிருத்தி சார்ந்த பல விடயங்கள் மக்களால் முன்வைக்கப்பட்டன.

அபிவிருத்திக்குழு கூட்டத்தில் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், வடமராட்சி கிழக்கு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (8- 104)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 250 | 320 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 160 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 600 | 650 | 700 |
| தக்காளி | 350 | 350 | 350 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 250 | 220 | 250 |
| கோவா | 450 | 450 | 500 | 400 | 500 |
| கரட் | 600 | 650 | 500 | 650 | 600 |
| பூசணி | 140 | 180 | 160 | 150 | 200 |
| புடோல் | 120 | 120 | 150 | 130 | 200 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 300 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 140 | 110 | 150 |
| பாகற்காய் | 700 | 600 | 700 | 600 | 800 |
| வெண்டக்காய் | 150 | 120 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 300 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 280 | 300 |
| லீக்ஸ் | 350 | 400 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 300 | 350 | 350 | 380 | 400 |
| கறிமிளகாய் | 500 | 600 | 600 | 520 | 500 |
| முருங்கைக்காய் | 1200 | 1300 | 1000 | 1300 | 1200 |
| போஞ்சி | 700 | 700 | 700 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 200 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 60 | 20-60 | 60 | 100 | 80 |
| தேசிக்காய் | 350 | 300 | 300 | 350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 180 | 180 | 100-170 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 600 | 700 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 500 | 500 | 600 | 500 |
| முள்ளங்கி | 200 | 150 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 100 | 100 | 50 |
| வல்லாரை | 80 | 70 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | 200 | 200 | 120 | -- | 240 |

# மருத்துவர் கோபிசங்கருக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த 12 ஆண்டுகளாகப் பணியாற்றிய என்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் ரி. கோபிசங்கர், இலங்கை, கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கின்றார்.



இலங்கை என்பு முறிவு சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் தலைவரான இவர் பல்வேறு அமைப்புகளின் ஆலோசகராகவும் செயற்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

## "சத்துள்ள உணவு சிறுவர்களுக்கான உரிமை"

# விழிப்புணர்வு நடைபவனி



(யாழ்ப்பாணம்)

வேள்ட் விஷன் லங்கா நிறுவனமானது சாவகச்சேரி பிரதேச அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் இணைந்து நடத்திய "சத்துள்ள உணவு சிறுவர்களுக்கான உரிமை" எனும் மாபெரும் விழிப்புணர்வு நடைபவனியும் விழிப்புணர்வு நிகழ்வுகளும் நடைபெற்றது.

நடைபவனியானது

சாவகச்சேரி நகரசபைக்கு முன்பாக ஆரம்பித்து சாவகச்சேரி பேரூந்து நிலையத்தைச் சென்றடைந்தது. பின்னர் அங்கு வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவர்களினால் விழிப்புணர்வு வீதி நாடகமும் ஆற்றுகை செய்யப்பட்டது.

பின்னர் அங்கிருந்து ஆரம்பமான நடை பவனியானது மீண்டும் சாவகச் சேரி கலாசார மண்டபத்தை சென்றடைந்தது.

இந் நிகழ்விற்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் விழிப்புணர்வு சித்திரப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டதோடு பாடசாலைச் சிற்றுண்டிச்சாலைகளில் அரச கொள்கை நியமனங்களை உறுதியாக செயற்படுத்த வேண்டி மாணவர்களினால் கையொப்பமிட்ட விண்ணப்பக் கோரிக்கையும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சிறுவர்கள் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் இந்த செயற்றிட்டத்துக்கு ஆதரவு வழங்கினர். (8-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We, the Principal, Staff & Students
of
**St.John's College, Jaffna,**
cordially invite
the Parents, Old Boys & Well-Wishers
to
**The Annual Prize Giving**
to be held on
Saturday, 28 th June 2025, at 9.00 a.m.
in the
Jubilee Hall.
We are honoured to have
**professor Sivamainthan Vithiananthan**
(Associate professor of Surgery at Harvard Medical School and
Chief of Surgery, Cambridge Health Alliance, Boston, (U.S.A)
accompanied by
**Mrs.Shyamala Vithiananthan**
as our Chief Guest. (C-3259)

# கனடா சென்றார் ஹரிணி



(கொழும்பு)

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று அதிகாலை கனடாவுக்கு புறப் பட்டுச் சென்றார்.

தெற்காசிய பிராந்தியத்தின் பிரதிநிதியாக பொதுநலவாய கற்றல் ஆளுநர்கள் சபையில் பங்கேற்பதற்காக அவர் கனடா சென்றுள்ளார்.

இந்த உச்சிமாநாடு முதன்மையாக சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கான கல்வி மற்றும் பயிற்சி, உயர்கல்வி, ஆசிரியர் கல்வி, வாழ்நாள் முழுவதும் கற்றல் மற்றும் தொழில் முறைக் கற்றலை மேம்படுத்த டிஜிற்றல் தொழில் நுட்பத்தின் ஒருங்கிணைப்பு ஆகிய முக்கியதுறைகளில் கவனம் செலுத்தும். (நி)

# 50 பேருந்து நிலையங்களை நவீனமயப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 50 பிரதான பேருந்து நிலையங்களை நவீனமயப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்திற்கு விமானப்படையின் ஆதரவு பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. மத்திய பேருந்து நிலைய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், உணவகம், ஓய்வறை, பயணச்சீட்டு வழங்குமிடம், நிர்வாகப் பிரிவு, செயற்பாட்டு அறை மற்றும் சாரதிகள் தங்குமிடம் ஆகியவற்றை நவீனமயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (நி)

**லங்கா மஹால் (PVT) LTD**
DHL
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (254)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**
Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

**இந்திய சாஸ்திரியார் வருகை**
சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.
தொடர்புகளுக்கு-**076 682 7368**
No.139, Main Street Jaffna.
**யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்**
**(முன்பதிவு செய்து வரவும்)** (4598)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**9/23, டச்சு வீதி, வட்டாரம் -06**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 06. டச்சு வீதியிலுள்ள இல: 9/23 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **வேலுப்பிள்ளை காசிப்பிள்ளை** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **காசிப்பிள்ளை யோகானந்தசிவம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.த.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6034/08.07.2004ஆம் இலக்க உறுதியால் **வேலுப்பிள்ளை காசிப்பிள்ளை கைம்பெண் தேம்பாமலர்** ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**முருகுப்பிள்ளை ரவிந்திரனும் பெண் தனலக்சுமியம்மாவும்** ஆகியவர்கள் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 13247/18.09.2011 ஆம் இலக்க உறுதியால் குறித்த **காசிப்பிள்ளை யோகானந்தசிவம்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**செல்வராசா மறுபெயர் தளையசிங்கம் இராசலிங்கம்** ஆகியவர் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 13328/.11.10.2011 ஆம் இலக்க உறுதியால் குறித்த **முருகுப்பிள்ளை ரவிந்திரனும் பெண் தனலக்சுமியம்மாவும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**விநாயகமூர்த்தி தயாளனும் பெண் ரஜனியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 14867/ 18.10.2013 ஆம் இலக்க உறுதியால் குறித்த **செல்வராசா மறுபெயர் தளையசிங்கம் இராசலிங்கமும் பெண் செல்வராணியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **விநாயகமூர்த்தி தயாளனும் பெண் ரஜனியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனமானது மேற்படி 6034 ஆம்,13247 ஆம் , 13328 ஆம் மற்றும் 14867 ஆம் இலக்க உறுதிகளில் ஓர் சொரியல் ஆதனமாகவே விபரிக்கப்பட்டுள்ளதாகையாலும், எனினும் குறித்த ஆதனமானது நீண்டகாலமாக வடக்குப்பக்கமாக முறையாக எல்லைகளிடப்பட்டு நிந்தமாகவே ஆட்சி செய்யப்பட்டு வரப்படுகின்றது என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு சாருஜா சிவநேசன் முகதாவில் 2857/29.12.2024 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தலும் உறுதிப்படுத்தலும் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

குறித்த **விநாயகமூர்த்தி தயாளனும் பெண் ரஜனியும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது **இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராத குறித்த ஆதனமானது **விநாயகமூர்த்தி தயாளனும் பெண் ரஜனியும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை** (281)

# நல்லூர் பிரதேசசபை தவிசாளர் குழு பூம்புகாருக்கு விஜயம்

யாழ்ப்பாணம் அரியாலை பூம்புகார் பகுதிக்கு நல்லூர் பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று அப்பகுதி மக்களின் குறைகளை கேட்டறிந்து கொண்டனர்.

குறிப்பாக கடற்றொழில் செய்வோர் . உரிய தொழில் உபகரணங்கள் இன்றியும், மீன் பிடி துறைமுக வசதிகள் , படகுகளை நிறுத்தி வைப்பதற்கான உரிய வசதிகள் இன்றி சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பில் பூம்புகார் கடற்றொழில் சங்க பிரதிநிதிகளின் அழைப்பினை ஏற்று, நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன் , உபதவிசாளர் ஜெயகரன். யாழ்.மாநகர சபை முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் மற்றும் மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வ.பார்த்தீபன் ஆகியோர் நேரில் சென்று அப்பகுதி மக்களின் குறைகளை கேட்டறிந்து கொண்டனர்.

அப்பகுதி மக்களின் குறைகளை தீர்க்க விரைந்து தம்மால் முடிந்த நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என உறுதி அளித்துள்ளனர். (8-33)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் கலைமாணிப்பட்டப்படிப்பு (வெளிவாரி)

**முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை**
**அணி-I 2013 / 2014 மற்றும் அணி-II 2016 / 2017**
**பழைய பாடத்திட்டம்**

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் ஆடி மற்றும் ஆவணி, 2025 காலப்பகுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்கள் பரீட்சைக்கான விண்ணப்பத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பரீட்சைக்கான விண்ணப்படிவத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் நேரடியாக அல்லது அதன் இணையத்தள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.** பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவமானது 05.07.2025 (சனிக்கிழமை) வரையிலான காலப்பகுதியில் காலை 9.30 மணி தொடக்கம் மதியம் 01.00 மணி வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் நேரடியாக சமர்ப்பிக்க முடியும்.

*மேலதிக விபரங்களுக்கு*
இணையத்தள முகவரி : https://www.codl.jfn.ac.lk/
தொலைபேசி இலக்கம் : **021-222 3612**

**பதிவாளர்.** (சி-3253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட இஸ்ரேல்!

**(ஜெருசலேம்)** — **ஈரானுடனான போர் நிறுத்தத்திற்கான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் முன்மொழிவுக்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டதாக பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் நேற்று செவ்வாய்க்கிழமை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.**

**"பாதுகாப்பில் அளித்த ஆதரவிற்கும், ஈரானிய அணுசக்தி அச்சுறுத்தலை ஒழிப்பதில் பங்கேற்றதற்கும் ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் அமெரிக்காவிற்கு இஸ்ரேல் நன்றி தெரிவிக்கிறது"** என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எனினும், எந்தவொரு போர்நிறுத்த மீறலுக்கும் இஸ்ரேல் கடுமையாக பதிலடி கொடுக்கும் என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)



# "ட்ரம்ப் போர்க்குற்றவாளி!" அமெரிக்காவில் போராட்டம்

(வோஷிங்டன்)

ஈரான், இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கிடையிலான மோதல்களில் அமெரிக்காவும் இணைந்து கொண்டதையடுத்து மத்திய கிழக்கில் பதற்றநிலை ஏற்பட்டது.

இதனையடுத்து அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் நூற்றுக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஈரான் மீது நடத்தப்படும் போரை நிறுத்தவும், ஈரானை தொடாதே, ட்ரம்ப் ஒரு போர் குற்றவாளி போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஈரானுடன் மோதலை தொடங்கியது மற்றும் காஸா மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதல் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி இஸ்ரேலுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர். (நி)




# போர் நிறுத்தம் அமுலில்
## தயவுசெய்து மீறாதீர்கள்
## ட்ரம்ப் வலியுறுத்தல்

(வோஷிங்டன்)

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் "இப்போது நடைமுறைக்கு வந்துள்ளது" என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.


கடந்த சில மணி நேரங்களில் ஈரான் இஸ்ரேலிய பிரதேசங்கள் மீது பல ஏவுகணைகளை ஏவியதை அடுத்து, மத்திய கிழக்கில் உள்ள இரண்டு பரம எதிரிகளும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீற வேண்டாம் என்று அமெரிக்கத் தலைவர் எச்சரித்தார். இது குறித்து ட்ரூத் சமூக ஊடகப் பதிவில் ட்ரம்ப், போர் நிறுத்தம் இப்போது நடைமுறையில் உள்ளது. தயவுசெய்து அதை மீறாதீர்கள் என்று பதிவிட்டார்.

செவ்வாய்க்கிழமை காலை 4 மணிக்குத் தொடங்கும் இந்த போர் நிறுத்தம் 24 மணி நேர கட்டமாக இருக்கும் என்றும், ஈரான் ஒரு தலைப்பட்சமாக முதலில் அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தும்.

12 மணி நேரத்திற்குப் பின்னர் இஸ்ரேல் இதைப் பின்பற்றும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், இஸ்ரேல் மீதான ஈரானிய ஏவுகணைத் தாக்குதல்கள் பற்றிய தகவல்கள் வந்தன.

ட்ரம்ப் அறிவித்த போர் நிறுத்தத்திற்குப் பின்னர் தொடங்கப்பட்ட தாக்குதல்களில் குறைந்தது நான்கு பேர் கொல்லப்பட்டதாகவும் ஆறு பேர் காயமடைந்ததாகவும் டெல் அவிவ் தெரிவித்தது. (நி)



# பே...
## அதி...

(டெ...

இடையில...
முடிவுக்கு...
முழு பே...
அதிகார...

கட்டாரில் உள்ள அமெரிக்க இராணுவத் தளமான அல் உதெய்த் விமானத் தளத்தின் மீது நேற்று முன்தினம் இரவு ஈரான் பல ஏவுகணைகளை ஏவி தாக்கியுள்ளது.

அமெரிக்கா ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ார் நிறுத்தம்!
# றிவித்தது ஈரான்!

டஹ்ரான்)

**இஸ்ரேல் மற்றும் ஈரான் பிலான 12 நாட்கள் நீடித்த போரை க்குக் கொண்டுவரும் வகையில் போர் நிறுத்தத்தை ஈரான் ரபூர்வமாக அறிவித்துள்ளது.**


இருப்பினும் ஈரானின் ஏவுகணைகளை இடைமறித்து அழித்ததாக கட்டாரும், அமெரிக்காவும் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் 13 அன்று ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே மோதல் நடந்து வந்தது.

அமெரிக்காவின் தலையீடு நிலைமையை மேலும் மோசமாக்கியது. இந்நிலையில் ஈரானும், இஸ்ரேலும் போர் நிறுத்தத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது சமூக வலைதள பக்கத்தில் தெரிவித்தார்.

ஆனால் போர்நிறுத்தம் தொடர்பாக ட்ரம்ப் அறிவிப்பை ஈரான் வெளியுறவு அமைச்சர் சையத் அப்பாஸ் அரக்சி மறுத்தார்.

இந்நிலையில், இஸ்ரேல் உடனான சண்டையில் போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளதாக ஈரான் அரசு ஊடகம் அறிவித்துள்ளது.



முதலில் போர் நிறுத்தம் இல்லை என்று கூறிய ஈரான் தற்போது போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது. (நி)




## மீண்டும் வான்வெளியை திறந்தது கட்டார்

(கட்டார்)


டோஹாவில் அருகிலுள்ள அமெரிக்க விமானப்படை தளத்தின் மீது ஈரான் நடத்தும் பதிலடித் தாக்குதல்களை எதிர்பார்த்து நேற்று முன்தினம் மூடப்பட்டிருந்த தனது வான் வெளியை கட்டார் மீண்டும் திறந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு அல் - உதெய்த் ஏவுகணைகளை ஈரான் வீசியது.

இதனால் உயிரிழப்புகள் அல்லது சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் கட்டார் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா உயர்ஸ்தானிகர் – பிரதமர் சந்திப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கலர் டேர்க் மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகிய இருவருக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு பிரதமர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடலின் போது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பல்வேறு திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் பிரதமர் தனது கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் அண்மையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் தொடர்பிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கலர் டேர்க் கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

கிராமப்புறங்களில் நிலவும் வறுமையை ஒழித்தல், டிஜிற்றல் மய மாக்கல் திட்டம், பொருளாதாரம் மற்றும் சமூகத்தை டிஜிற்றல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மாற்றியமைத்தல் ஆகியவை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக பிரதமர் எடுத்துக்காட்டினார்.

இந்த கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கலர் டேர்க், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1989- இந்து
நட்சத்திரம்: கேட்டை
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Technician
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15710

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி-பா- 33
உயரம்:5'6"
தகைமை/தொழில்-MBBS, Doctor
எதிர்பார்ப்பு:Doctor
தொ.இ: B/15711

பிறப்பு:1977-இந்து
நட்சத்திரம்:உத்தராடம்
7 இல் செவ்
கி-பா: 54
உயரம்:5'2"
தகைமை/தொழில்:Diploma,Manager
எதிர்பார்ப்பு: படித்தவர்
தொ.இ: B/15712

பிறப்பு: 1985- இந்து
நட்சத்திரம்:சித்திரை
கி-பா- 5
உயரம்:5'9"
தகைமை/தொழில் -BSc,Project Assistant
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15713

பிறப்பு: 1984- இந்து
நட்சத்திரம்:அனுசம்
கி-பா- 23 1/2
உயரம்:5'6"
தகைமை/தொழில்: Peon(gov)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15714

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L.தையல்
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/15716

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்-கேட்டை
1இல்செவ்
கி-பா-33 1/2
உயரம்: 5'
தகைமை/தொழில்: HNDE
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், சைவபோசனம்
தொ.இ: G/15719

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்-அனுசம்
உயரம்-5'4"
தகைமை/தொழில்: BSc(following))
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்.வெளிநாடு
தொ.இ: G/15720

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
கி.பா -17 3/4
உயரம்: 5'5"
தகைமை/தொழில் -MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/15721


பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்:சுவாதி
12 இல் செவ்
தகைமை/தொழில் -Degree, London
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்,
தொ.இ: G/15723

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


**தென்னாடு இதழின் தலைமை ஆசிரியர் தென்னவன் பார்த்தீபன் அவர்கள் தென்னாடு சஞ்சிகையின் 58 ஆவது இதழில் எழுதிய ஆசிரியர் தலையங்கம் இங்கே பிரசுரமாகிறது.**

# பண்பாட்டுத் தற்கொலை

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு – (குறள்–423)**



பண்பாடு என்றால் என்ன, பண்பாட்டு விழுமியங்கள் என்றால் என்ன என்பது பற்றி நாங்கள் எப்போதாவது ஆழமாகச் சிந்தித்திருக்கிறோமா என்று எண்ணுமளவிற்கு தமிழர் பண்பாடு இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் மாறிக்கொண்டு வருகிறது. பண்பாடு என்பது மொழியுடன் மட்டும் நின்றுவிடாது. தத்துவம், உணவு, இறை நம்பிக்கை, சடங்குகள், அரசியல், இறையாண்மை, நிலம், வழிபாட்டு முறைமைகள், சமூக மேம்பாடு என்று பல கூறுகளைக் கொண்டது. நாங்கள் இதில் ஏதாவது ஒன்றுடன் குறிப்பாக மொழி மற்றும் அரசியலுடன் நின்றுகொண்டு மற்றவற்றை தொலைத்துவிட்டோமா என்ற எண்ணம் என் மனதில் பல்லாண்டு காலமாக எழவே செய்கின்றது.

பண்பாட்டுக் கூறுகளை ஒவ்வொன்றாகப் பின்னர் பார்ப்போம். இம்முறை குறிப்பாக சடங்குகள் மற்றும் உணவு முறை என்பதனைப் பார்ப்போம். அதிலும் குறிப்பாக ஒரு முக்கியமான வாழ்வியல் சடங்கான திருமணச் சடங் கினை உதாரணமாக எடுத்து இதனை ஆராய்வோம். முன்னரெல்லாம் திருமணம் என்றால் ஊர்கூடி பலகாரம் சுட்டு, நிறக்கடதாசியை கீற்றுகளாக வெட்டி அலங்காரம் செய்து, முளைப்பாலிகை வைத்து பொன்னுருக்கி, அரசாணைக் கால் என்று முள்முருங்கை நட்டு, பந்தல் கட்டி வாழை நிறுத்தி, வாசலில் கும்பமிட்டு அருகருகே விளக்கிட்டு, வாழைப்பழ சீப்பு வைத்து, திருநீறும் சந்தனமும் குங்குமமும் பன்னீரும் கற்கண்டும் சேர்த்து வைத்து, வருபவருக்கு வணக்கம் சொல்லி பன்னீரிட்டு, கற்கண்டை உமியக் கொடுத்து, பூவினால் பந்தல் கட்டி, மாமன் பால் வைத்து நீராட்டி, சபை கூடி திருமணம் செய்து, கை நனைக்க நீர்ச்செம்பு தான் கொடுத்து, பந்திக்கு பாய் போட்டு, தலை வாழையிலையை முனைப்பக்கம் இடமாக இட்டு, கைக்குத்தரிசி சோறு போட்டு, பயிற்றங்காய் பருப்புடன் நெய்சேர்த்து, பால் சொதியும் மோர் மிளகாயும் சேர்த்து மரவள்ளிப் பொரியலுடன் படையலிட்டு வடையும் பாயாசமும் இலையில் இட்டு, நாலுபேருக்கு ஒரு செம்பு என்று குடிக்க தண்ணியும் வைத்து, உண்டபின் வெற்றிலை, பாக்கு என்று சீர்கொடுத்து சிறப்பாக நடைபெற்றது. வந்தவர் போனவர் எல்லாம் சேலை வேட்டி என்று நிறைவாக பொட்டுடனும் பூவுடனும் நெல்லும் பூவும் கொண்டும் சொல்லும் உள்ளமும் சேர்ந்து நிற்க வாயார மனதார வாழ்த்திச் சென்றனர்.

ஒன்றை மட்டும் ஆழமாக விளங்கவேண்டும். காலங்கள் எத்தனை தான் கடந்தாலும், கடைசி வாழ்வியலில் ஆவது பண்பாடு, தொக்கு நிற்கிறதே என்ற பூரிப்பு எனக்கு எண்பது தொன்னூறுகளில், ஏன் இரண்டாயிரத்திலும் ஆரம்பத்தில் இருந்தது. இந்த சடங்கு வழி பண்பாட்டினைப் பார்த்தாவது இவர்கள் தமிழர்கள் என்ற காலம் இப்ப மாறுகின்றது என்பது தான் வேதனையான உண்மை. மற்றவர்கள் வலிந்து மாற்றாமல், நாங்களாகவே பண்பாட்டுத் தற்கொலை செய்கிறோம் என்பது எனது எண்ணம் மட்டுமல்ல சமூகத்தில் காணக்கூடிய உண்மை. திருமணத்திற்கு முன்னர் சங்கீத், மேந்தி என்று வேற்றுப் பண்பாட்டு கலப்புகள், ஆண் பெண் உடைகளின் மாற்றம், தாலி கட்டுதலைத் தவிர எல்லாவற்றிற்கும் ஒப்பந்தகாரர்கள், வளையும் நெகிழித் தட்டில் சாப்பாடு. பயிற்றங்காயும் பருப்பும் போய் பன்னீரும் ரொட்டியும், பாயசம் போய் குளிர்களி, விளங்காத மொழியில் சடங்குகள் (விளங்காதவரைக்கும் தான் நல்லது) என்று எல்லாமே புலம்பெயர் நாடுகளில் மாறிவிட்டன. மண்ணில் பிள்ளையின் திருமணம் எனக்கு நிறைவு என்று இதனை நாட்டிற்கும் கொண்டு சென்று அங்கேயும் இதுதான் கலாசாரம் என்று பெருமைப்பட்டு, நாங்களே பண்பாட்டுத் தற்கொலை செய்து கொள்கிறேம்.

தமிழர் பண்பாடு என்பது தற்போது வாழ்வியல் மற்றும் திருக்கோயில் சடங்குகளில் மட்டும் தான் எஞ்சி நிற்கிறது. அதனை மேலும் அழியவிடாது, காப்பாற்றி மேன்மையுறச் செய்ய உலகத்தமிழர் அனைவரும் முன் வரவேண்டும். குறிப்பாக என் சக பெற்றோர்கள் இதனைச் சிந்தித்து செயற்படுவது வரலாற்றுக் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனீக்களை கொண்டாடும் மாதமிது; கற்றுக்கொள்ள நிறைய இருக்கின்றது!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

சமூக அந்தஸ்துள்ள உயிரினங்களில் மனிதன் தன்னை முதன்மைப்படுத்தினாலும் ஜந்துகளில் முதன்மையானது தேனீ எனப்படும் பூச்சிவகையாகும். ஐந்தறிவு என நாம் அதனை தாழ்த்தியே வைத்திருந்தாலும் அவற்றின் வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தையும் கவனித்தால் பல விடயங்களை சொல்லியும் சொல்லாமலும் எமது வாழ்க்கைக்கு புரியவைத்திருக்கின்றன. தேனீ தானே என அதனை நாம் பரிகசிக்கக்கூடாது. உலகில் தேனீ இல்லையென்றால் 60-70% உணவு எமக்கு கிடைக்காது. மகரந்த சேர்க்கையில் முதலிடம் வகிக்கும் தேனீக்கள் பல தாவரங்களில் அயன்மகரந்த சேர்க்கை மூலம் விதையுருவாவதற்கு காரணமாயிருக்கின்றன. அதிலும் நாம் உண்ணும் உணவு தாவரங்களில் முக்காவாசி தாவரங்கள் தேனீயின் உதவியுடன் நடைபெறும் மகரந்த சேர்க்கையை நம்பியிருக்கின்றன என்பதனை சற்று ஊன்றியே கவனியுங்கள்.


**பீடைநாசினிகளால் அழிவுறும் தேனீக்கள்**

வயலில் நாம் விசிறும் ஒவ்வொரு துளி பீடைநாசினியும் தேனீக்களை கொன்று குவிக்கின்றன. பீடை நாசினிகள் தாவர பீடைகளுக்கு மட்டும் எதிரிகளல்லவே. அதிகமான நன்மை தருகின்ற பூச்சிகளுக்கும் தீமையைத் தருகின்றன என்பதனால் சூழலில் அவற்றின் பங்களிப்பை அதிகம் பாதித்துவிடுகின்றன. சேதன விவசாயம் மூலம் பயிர் விளைவிக்கும் விவசாயியினாலும் வீட்டுத்தோட்டங்களினாலும் தேனீக்கள் தமக்கு தேவையான தேன்சுரப்பு மற்றும் மகரந்த மணிகளை பெற்று தமது குடியை விருத்தி செய்வதோடு எமக்கு பயன்தரும் தேனை, மெழுகு, றோயல் ஜெலி எனப்படும் தனித்துவமான உணவு என்பனவற்றை உற்பத்தி செய்கின்றன. இருந்தாலும் பறந்தாலும் தவழ்ந்தாலும் சுழன்றாலும் தேனீக்கள் எமக்கு நன்மை தரும். எமது சூழலுக்கு மிகவும் நன்மைதருகின்ற பூச்சிகளாக இருப்பதனால் அவற்றின் இருப்பை, செயலை, பாதுகாப்பை உறுதி செய்யும் வண்ணம் உலக உணவு மற்றும் விவசாய தாபனம் இம் மாதத்தை தேனீக்களை கொண்டாடுவதற்காக பரிந்துரைத்திருக்கின்றது. தேனீக்களில் பல வகை இருப்பினும் ஏபிஸ் செறேனா இன்டிக்கா எனப்படும் தேனீயை மட்டும் நாம் தேன்பெட்டிகளில் வளர்த்து தேனையும் பிறபொருட்களையும் பெற்றுக்கொள்ளுகின்றோம்.

**ஆண்தேனீக்கு தந்தையில்லை**

தேனீக்களில் இராணித்தேனீ, ஆண்தேனீ, வேலையாள் தேனீ என மூன்று வகையான பிரிவுகள் உண்டு. இராணித்தேனீ மற்றும் வேலையாள் தேனீக்கள் பெண்ணாகவும் அதாவது இருமடியமாகவும் ஆண்தேனீ கருக்கட்டல் நடைபெறாத முட்டையிலிருந்தும் அதாவது ஒருமடியமாகவும் உருவாகின்றன. இதனால் கருக்கட்டல் நடைபெறாதவிடத்து ஆண்தேனீக்கு தந்தை இல்லை என பொருள்படும். இங்கு பெண்தேனீக்கள் எந்த விதத்திலும் சளைத்தவை இல்லை. ஒரு தேன்குடிலின் ஒட்டுமொத்த செயற்பாட்டினையும் பெண்தேனீக்களே நடாத்துகின்றன. அதிலும் வேலையாள் தேனீக்கள் தமது

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



வயதின் படி தமக்கான வேலைகளை ஏற்கெனவே திட்டமிடப்பட்ட வகையில் செய்து முடிக்கின்றன.

**வேலையாள் தேனீக்கள் பலவிதம்**

வேலையாள்தேனீக்கள் இராணித்தேனீ இடும் கட்டளையை செவிமடுத்து தமக்குள்ளும் கலந்துரையாடி தேன்கூட்டில் இருக்கும் வேலைகனைத்தையும் வரிசைக்கிரமமாக செய்து முடிக்கின்றன. அவற்றில் தாதி தேனீ, விசிறி தேனீ, பாதுகாக்கும் தேனீ, இராணியை கவனிக்கும் தேனீ, தேன்கொண்டு வரும் தேனீ, மகரந்த மணி சேகரிக்கும் தேனீ எனப் பலவகையுண்டு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலை தேன்கூட்டில் இருக்கும். சோர்வுற்ற, நலிவுற்ற தேனீக்களை சகதேனீக்களே தமது கொடுக்கால் கொன்று கூட்டிலிருந்து வெளியேற்றிவிடும். இராணித்தேனீ சுரக்கும் ஒருவகை சுரப்பான இராணித்தேனீ பதார்த்தம் அளித்து தேனீக்களையும் தேன்குடியில் கட்டுப்படுத்தி வைத்திருக்கும். அத்துடன் தேவைக்கேற்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் வேலையாள் தேனீக்களே முடிவு செய்கின்றன. வேலையாள் தேனீக்கள் சுரக்கும் ஒருவகையான சத்து நிறைந்த றோஜல் ஜெலி எனும் பதார்த்தத்தை தொடர்ந்து உண்ணும் இணைய புழுக்கள் நாளடைவில் புதிய இராணித்தேனீயை உருவாக்கின்றன. ஒரு குடியில் இராணித்தேனீ நோய்வாய்ப்பட்டால் அல்லது நோவுப்பட்டால் வேலையாள் தேனீக்கள் ஒன்றிணைந்து புதிய இராணித் தேனீயை உருவாக்கும் வல்லமையுள்ளன. தங்கள் தேன்குடியில் இருக்கும் உறுப்பினர் அனைவரும் சுறுசுறுப்பாக இயங்கக்கூடியவர்களாக வைத்திருக்கும் இவ்வகைத் தேனீக்கள் எந்த தேனீவகையும் நலிவுற்றிருந்தால் அவற்றை தமது குடியிலிருந்து கொடுக்கினால் சொடுக்கி அவற்றை இறக்கச் செய்து குடியிலிருந்து அகற்றிவிடும்.

**தேனீக்களின் முழுமுயற்சி**


12 தேனீக்களின் தொடர்ச்சியான 4 நாள் முயற்சியினாலேயே ஒரு துளி தேன் சுரக்கப்படுகின்றது. ஆதலால் தேனை நாம் வீணாக பயன்படுத்தக்கூடாது. தேனீக்களின் தேனுக்கு முடிவுக்காலம் என்று ஒன்றில்லை. ஆனால் கடைகளில் இருக்கும் தேன்களுக்கு மதிப்பும் இல்லை இருப்பினும் மக்கள் வாங்க விரும்புவதில்லை. அதில் கலப்படம் இருப்பதனை ஊகித்து அவற்றை வாங்கி பயன்படுத்துவது குறைவு. ஒரு தேன் குடியில் காணப்படும் ஏறத்தாழ 100,000 எண்ணிக்கையான தேனீக்களில் ஆண் தேனீக்கள் 15சதவீதமாகவும் ஏனையவை வேலையாள் தேனீயாகவும் ஒரேயொரு இராணித் தேனீயாகவும் காணப்படும்.

எமது தேர்தல் போல தேனீக்களிலும் ஒற்றுமையான விடயங்களுமுண்டு. நாம் அனைவரும் நினைப்பது போல இராணித் தேனீயே தேன்குடியின் அடுத்த வாரிசாக நியமிக்கப்படவேண்டும். ஆனால் அப்படியல்ல தேன்குடில்களில் காணப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும் இராணித்தேனீயின் வலிமை மற்றும் வீரியத்தைப் பொறுத்தும் வழக்கமாக இடப்படுகின்ற முட்டைகளுக்கு றோஜல் செல்லி என்பதனை சுரந்து வழங்குவதன் மூலம் இராணிதேனீக்களை உற்பத்தி செய்கின்றன. தேனீக்களின் வயிற்றுப்பகுதியின் பிற்பகுதியில் மூன்று அல்லது நான்கு சுரபிகள் இருப்பதனால் அவை தேவைக்கேற்ப மெழுகினைச் உற்பத்தி செய்து தமது குடிலை உருவாக்குவதற்கு பெரிதும் உதவும். இவ்வாறு தேன்வதையிலுள்ள உணவு கெட்டுப் போகாமல்இருப்பதற்காக இந்த மெழுகினால் அதனை சீல் செய்து கெடாமல் பாதுகாக்கும். தேனீக்களில் வயதுக்கேற்ப சிறியதேனீக்களின் வேலைகள் பிரிக்கப்பட்டு கொடுக்கப்படும். இதனை decentralization என அழைப்பர். இவ்வாறு கொடுக்கப்படும் வேலைகள் சிறப்பாக தேன் குடியில் செய்யப்பட்டு இராணித் தேனீயினால் அங்கீகரிக்கப்படும். தேனீக்களின் முயற்சியினால் தேன்குடி சிறப்பாக செயற்பட முடிகின்றது.

இராணித் தேனீயின் உற்பத்தியும் அதனது செயற்பாடும் நலிவுற்றால் அதனை அகற்ற வும் வேலையாள் தேனீக்களுக்கு உரித்துண்டு. இது எமது பிரதேசத்தில் அரசியல் செய்பவர்கள் சரியான வழியில் நடக்காது விடில் மக்களாகவே தலைமையை தெரிந்தெடுக்க உரிமை உடையவர்களாக மாற்றம் பெறுகின்றன.

தேனீக்களின் பங்களிப்பின் காரண மாகவே எமது சூழல் தொகுதியில் பலவகை மரங்களை நாம் வரப்பிரசாதமாக பெற்றிருக் கின்றோம். பூக்குந் தாவரங்களை அதிலும் தேனீ விருப்பப்படும் பூக்குந்தா வரங்களைக் கொண்ட தொகுதி யாக அது அமையப் பெறுவது காலத்தின் கட்டாயமும் கூட. வீட்டுத் தோட்டங்களில் பீடை களுக்கு மருந்து விசிறாமல் அவற்றை இயற்கை வழிமூலமே கட்டுப்படுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வரலாற்று சிறப்பு மிக்க வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம்கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை தொடக்கம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை வரை சிறப்பாக நடைபெற்றது .ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றதோடு பெருமளவான பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றியிருந்தனர். (படம்- தவசீலன்)


# மாவைக்கந்தனின் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமி ஆலய மறோற்சவப் பெருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.06 மணிக்குப் புதிதாக அமையப்பெற்ற வெள்ளிக் கொடிஸ்தம்பத்தில் கொடி யேற்றும் வைபவம் ஆரம் பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் ஜுலை மாதம் 9 ஆம் திகதி புதன்கிழமை இரவு எட்டு மணிக்கு மஞ்சத் திருவிழாவும், 14 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு எட்டு மணிக்கு கைலாசவாகனத் திருவிழாவும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணி முதல் இரவு 11.30 மணி வரை திருக்கார்த்திகைத் திரு விழாவும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு பெரிய சப்பறத் திரு விழாவும் 23 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறு நாள் காலை 6 மணிக்கு கீரிமலை கண்டகி தீர்த்த கரையில் தீர்த்தோற்சவமும் அன்றைய தினமே இரவு 8.30 மணிக்கு கொடி இறக்க உற்சவமும் இடம்பெற்று 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு மாம்பழத் திருவிழாவும் 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணி க்கு காங்கேசன்துறை இந்து மஹா சமுத்திரத்தில் கப்பல் திருவிழாவும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பூங்காவன உற்ச வமும் இடம்பெறவுள்ளதென ஆலய பிரதம குருவும் ஆதீன கர்த்தாவுமாகிய து. ஷ. இரத்னசபாபதிகுருக்கள் தெரி வித்துள்ளார். (க-3)



# பலாலி மீன்பிடித் துறைமுகம் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பலாலி மீன்பிடித் துறைமுக புனரமைப்பு பணிகள் தற்போது துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

யுத்தம் காரணமாக அப் பகுதி மக்கள் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து சென்ற நிலையில் துறைமுகப் பகுதிகள் மிக மோசமாக சேதமடைந்தி ருந்தன. அத்துடன், கடற்பகுதிகளில் கற்களும் காணப்படுகின்றன.

அதனால் அப்பகுதி கடற்றொழிலாளர்கள் கடற் றொழிலுக்கு செல்லும் போது பல இடர்களை சந்தித்து வருகின்றனர்.

இந்நிலையில் மீன்பிடித் துறைமுக பகுதிகளையும் புனரமைத்து தருமாறு கடற்றொழிலாளர்கள் கோரி வந்த நிலையில், தற்போது புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனைப் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங் குமரன் நேரில் சென்று பார்வையிட்டார். (8-33)

# யாழில் பலத்த காற்று 45 குடும்பங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திடீரென மழையுடன் கூடிய பலத்த காற்று வீசியதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் 45 குடும்பங்களைச் சேர்ந்த 159 பேர் பாதிக் கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக் கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

வேலணை பிரதேச செயலர் பிரிவில் 5 குடும் பங்களைச் சேர்ந்த 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4 வீடுகளும், 7 அடிப்படை கட்டமைப்புகளும் சேதமடைந்துள்ளன.

ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் 11 குடும் பங்களைச் சேர்ந்த 37 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 9 வீடுகளும் ஒரு அடிப்படை கட்டமைப்பும் சேதமடைந்துள் ளன.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேர் பாதிக் கப்பட்டுள்ளதுடன் 3 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந் துள்ளன. (8-33)


## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - யாழ்ப்பாணம் சிற்றூண்டிச்சாலை மற்றும் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் போன்றவற்றிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஒப்பந்த விலைமனுக்கோரல் 2025/2026

தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை சிற்றூண்டிச்சாலை, சைக்கிள் பாதுகாப்பு நிலையம் மற்றும் அச்சுவேலி வைத்தியசாலை சைக்கிள் பாதுகாப்பு நிலையம் என்பனவற்றுக்கு தகுதியான தகைமை வாய்ந்த நடத்துநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றது.

| பெறுகை இலக்கம் | பெறுகை விபரம் | ஆகக் குறைந்த கேள்விப்பணம் (மாதாந்தம்) | பெறுகைப் பிணைப்பணம் |
|---|---|---|---|
| BH/THL/Canteen/ 2025/2026 | சிற்றூண்டிச்சாலை - தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை (புற்றுநோய் விடுதி கட்டடத் தொகுதி முன்பாக) | ஐம்பதாயிரம் (50இ000.00) | 10.000.00 |
| BH/ THL/Cycle Park/2025/2026 | சைக்கிள் பாதுகாப்பு நிலையம் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை | இருபதாயிரம் (20.000.00) | 4.000.00 |
| BH/ACU/Cycle Park/2025/2026 | சைக்கிள் பாதுகாப்பு நிலையம் - அச்சுவேலி வைத்தியசாலை | எண்ணாயிரத்து ஐநூறு (8.500.00) | 2.000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் 021 222 6253, 021 221 4966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ்முகவரியில் 25.06.2025 ஆம் திகதி முதல் 09.07.2025 ஆம் திகதி வரை வேலைநாட்களில் 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரைபரிசீலிக்கமுடியும்.

03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கேள்வி ஆவணங்களை மேற்படி முகவரியில் 25.06.2025 ஆம் திகதி முதல் 09.07.2025 ஆம் திகதி வரை வேலைநாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 2,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும்.

04. பெறுகை ஆவணங்கள் 11.07.2025 அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் 11.07.2025 அன்று காலை 10.00 மணிக்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

05. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் அலுவலகத்தில் காசாக செலுத்தி அவ் ஆவணத்தின் பிரதியினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

06. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை ஏற்பதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு முழுமையான அதிகாரமுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பளர் பணிமனை**
**யாழ்ப்பாணம்.**

(C-3260)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட நேரத்திற்காகவோ அல்லது மனிதருக்காகவோ காத்திருந்தால் மாற்றம் வராது, நாம் நமக்காகத்தான் காத்திருக்கிறோம், நாம் தான் அந்த மாற்றம்.
– பராக் ஒபாமா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# தமிழ் மக்களின் துன்பத்தை புரிந்து கொள்ளுங்கள்

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் (23) கொழும்புக்கு வருகை தந்துள்ளார்.

இன்று (25) யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் செம்மணிப் புதைகுழி உள்ள இடத்துக்குச் சென்று பார்வையிட வேண்டும் என்பது பற்றி இவ்விடத்தில் ஏலவே பிரஸ்தாபித்திருந்தோம்.

தவிர, செம்மணிப் புதைகுழியை ஆணையாளர் சென்று பார்ப்பதற்கு எந்தத் தடையும் இல்லை என இலங்கை அரசும் அறிவித்துள்ளது.

இவை ஒருபுறமிருக்க, தமிழர் தாயகத்துக்கு வருகின்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரிடம் நாம் கேட்பது, தமிழ் மக்களின் துன்பத்தைப் புரிந்து கொள்ளுங்கள் என்பதுதான்.

ஆம், 2009ஆம் ஆண்டு மே 18இல் இறுதி யுத்தம் முடிவுற்றது.

அந்தக் காலப் பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி நம் பெற்றோர்கள் – உறவுகள் கண்ணீரும் கம்பலையுமாக அலைகின்றனர்.

இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட தங்கள் பிள்ளைகள் எங்கே? என்ற கேள்வியோடு பெற்றவர்கள் படுகின்ற பாட்டை – அவலத்தை – வேதனையை மனித மொழிகளில் கூறிவிட முடியாது.

ஆம், ஒரு வருடம் இரண்டு வருடமல்ல. 16 வருடங்களாக, காணாமல்போன தங்கள் உறவுகளைத் தேடுகின்ற படலம் இன்னமும் தொடருகின்றது.

உண்மை. இராணுவத்திடம் ஒப்படைத்த தம் பிள்ளை, அவரின் குடும்பம் எங்கோ ஓர் இடத்தில் இருக்கின்றது.

அவர்களை இராணுவம் அடைத்து வைத்துள்ளது என்ற பெற்றோர்களின் நினைப்போடு காலம் கடந்து போகிறது.

பிள்ளைகளைத் தேடுகின்ற அந்த வயதான பெற்றோர்களின் அவலத்தைப் புரிந்து கொள்வதற்கு இந்த நாட்டில் யாருமே இல்லை.

இந்த நாட்டின் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அவர்கள் ஒருமுறை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது, காணாமல் போன எங்கள் பிள்ளைகளை மீட்டுத் தாருங்கள் எனப் பெற்றோர்கள் கேட்டனர்.

இதற்கு நீங்கள் அனுபவிக்கின்ற துன்பத்தை என் தாயார் அனுபவித்தார். சேகுவேரா புரட்சி ஏற்பட்டபோது எனது சகோதரன் காணாமல் ஆக்கப்பட்டார்.

காணாமல் ஆக்கப்பட்ட என் சகோதரனைத் தேடி என் தாயார் ஆற்றலைந்த துன்பத்தை நான் அறிவேன் என்றார். எனினும் இதுவரை எமக்கு எதுவும் ஆகவில்லை.

எனவே யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் மதிப்புக்குரிய ஆணையாளர் வோல்கர் அவர்கள்; எங்கள் பெற்றோர்கள் அனுபவிக்கின்ற துன்பத்தைப் புரிந்துகொண்டு செயலாற்ற வேண்டும். எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இங்கு எமக்குக் கொடுமை செய்தவர்கள் சுகபோகம் அனுபவிக்கின்றனர் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆகவே உங்களாலேயே எம் மக்களின் துன்பத்தை நீக்க முடியும். இதை மனித நேயத்துடன் செய்யுங்கள்.

# குடும்பப் பெண் படுகொலை இரட்டைச் சகோதரிகள் கைது

கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு சடலமாக மீட்கப்பட்ட குடும்பப் பெண்ணின் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் சகோதரிகளான இரட்டையர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஷ்ணு கோயில் வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான 38 வயது மதிக்கத்தக்க மனோதர்ஷன் விதுஷா என்ற குடும்பப் பெண் கடந்த மே மாதம் வெள்ளிக்கிழமை(30) படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இரண்டு பிள்ளைகளின் தாயான குறித்த பெண்ணின் கழுத்துப் பகுதியில் காயங்கள் ஏற்படக்கூடிய வகையில் வெட்டப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டிருந்ததாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின் வாயிலாக வெளிக்கொணரப்பட்டிருந்தது.

இந்நிலையில் இது குறித்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்த அம்பாறை மாவட்டக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று சந்தேகத்தின் அடிப்படையில் 34 வயதுடைய இரட்டைச் சகோதரிகளைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் கல்முனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

செம்மணிப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்க

# கிளிநொச்சியில் இன்று கதவடைப்புப் போராட்டம்

(கிளிநொச்சி)

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் இன்று வடக்கிற்கு விஜயம் செய்யவுள்ளதோடு செம்மணி மனிதப் புதைகுழியினையும் நேரில் சென்று பார்வையிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் செம்மணி அணையா விளக்குப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வண்ணம் வடக்குக் கிழக்கு தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் கதவடைப்புப் போராட்டத்துக்கு கிளிநொச்சி வர்த்தக சங்கம் தமது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

அதன்பிரகாரம்இன்று மருந்தகங்கள், உணவகங்கள் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைக்கான வர்த்தக நிலையங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்படும் என அச்சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை செம்மணிப் போராட்டத்துக்கு கிளிநொச்சியிலிருந்து கலந்து கொள்ளவுள்ளவர்களுக்காக விசேட போக்குவரத்து வசதிகளும் கிளிநொச்சி வர்த்தக சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் காலை 7.45 மணிக்கு A9 - நகர வீதி, பிள்ளையார் கோவில் கனகபுரம் வீதி, பிரவின் நகை வாணிபம் ஆகிய வற்றுக்கு முன்னால் வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அச்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7,316)

# ரணிலின் பிரிட்டன் விஜயம் குறித்து சி.ஐ.டி விசாரணை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலப் பகுதியில் பிரித்தானியாவுக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணையை ஆரம்பித்துள்ளது.

அவரது தனிப்பட்ட பயணத்திற்கு அரச நிதி செலவிடப்பட்டதாக முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி முதற்கட்டமாக வெளிவிவகார அமைச்சில் பணியாற்றிய 2 அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப் படவுள்ளதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-7)

# ஆயாக்கடவையானுக்கு இன்று சங்காபிஷேகம்

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகமானது இன்று ஆனி மிருகசீரிட நன்னாளில் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

காலை 6.30 மணிக்கு விசேட யாகம் இடம்பெற்று, தொடர்ந்து சித்தி விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் 108 சங்காபிஷேகமும் மாலை விசேட பூஜைகளைத் தொடர்ந்து வசந்தமண்டபப்பூஜை, சோடச உபசாரம் என்பன இடம்பெற்று சித்தி விநாயகப் பெருமான் அமுதவல்லி சுந்தரவல்லி சமேத முருகப்பெருமான் சகிதம் இரு வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாளிக்க வுள்ளார். (ம-7)

# 70 ஆவது பிறந்தநாளில் 70 பேருக்கு இலவச கண்புரை சத்திர சிகிச்சை

## முதியவரின் முன்மாதிரியான செயல்

தனது 70 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 70 வயோதிபர்களுக்கு இலவசக் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள நிதி அனுசரணை நல்கிய லண்டனில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் யாழ்.ஊரெழுவைச் சேர்ந்த ரஞ்சன் என்பவரது செயல் பலரது கவனத்தினையும் வெகுவாகக் கவர்ந்துள்ளது

அவரது நிதிப்பங்களிப்பிலான 70 வயோதிபர்களுக்குமான இலவச விசேட கண்புரை சத்திர சிகிச்சைநேற்று செவ்வாய்க்கிழமை (24) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வெற்றிகரமாக நடைபெற்றது.

கேளிக்கை கொண்டாட்டங்கள் எனத் தமது பிறந்ததினத்தில் பல இலட்சங்களை செலவழிக்கும் இளைய தலைமுறையினருக்கு, 70 வயதிலும் ரஞ்சன் அவர்கள் செய்த செயல் தக்க பாடமாக அமையும்என சமூக ஊடகங்களில் பலரும் தமது வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர். (ம-7)

# பேருந்து மோதி பாதசாரி பலி

மொனராகலை- கலபெத்த பகுதியில் பேருந்து மோதியதில் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த குறித்த நபர் மொனராகலை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)

# கொழும்பில் நேற்று மீண்டும் துப்பாக்கிச்சூடு

(கொழும்பு)

பொரளை, வனாத்த முல்லப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 5.45 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

உந்துருளியில் பிரவேசித்த இருவரினாலேயே குறித்த துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொரளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# தாக்குதலுக்கு இலக்கான மின்சாரசபை ஊழியர்

பண்டாரவளையில் வர்த்தக நிலையமொன்றில் மின்சாரத்தைத் துண்டிக்க வந்த மின்சார சபை ஊழியர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த மின்சார சபை ஊழியர் பண்டாரவளை மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம்தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பண்டாரவளைப் பொலிஸார்முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுச்சேரி பயணம் 13

புருசோத்தமன்

தொல்லியல் சான்றுகளைப் பாதுகாத்து அவற்றைப் பேணுவதில் புதுச்சேரி மாநில அரசு கொண்டுள்ள கருசனை எத்துணை உயர்வானதென்பது, சுப்பிரமணிய பாரதியார் வாடகைக்கு அமர்ந்த வீட்டைப் பாதுகாப்பதில் இருந்து புரிந்து கொள்ள முடியும்.

ஆம்,எதையுமே பாதுகாக்க முடியாத எங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து புதுக்சேரிக்குச் சென்ற எமக்கு, பாரதியார் இருந்த வீட்டைப் புதுப்பித்து அவர் சார்ந்த ஆவணங்களைப் பேணிப் பாதுகாப்பதும் அதற்கும் மேலாக அவற்றைப் பொது மக்கள் பார்வையிடுவதற்குமான ஏற்பாடுகள் எம்மை வியக்க வைத்ததில் ஆச்சரியமில்லை.

உண்மை. எங்கள் யாழ்ப்பாண மண்ணில் யாழ்ப்பாண மன்னர்கள் வாழ்ந்த இடங்கள் அழிந்து போகின்றன. மந்திரி மனையின் தோற்றம் எங்கள் இனத்தின் அசமந்தத்தை உறுதி செய்கின்ற அடையாளமாகும்.


இதேபோல பட்டத்து இளவரசிகள் நீராடிய ஜமுனா ஏரியை அறியாதவர்கள் பலர்.

அதுபோல யாழ்ப்பாணத்துப் பண்பாட்டின் உச்சமாக இருந்த யாழ்ப்பாணச் சத்திரத்துமடம், கந்தர்மடத்திலுள்ள அன்னசத்திரம் என்பன அடையாளம் இன்றி உருக்குலைந்துவிட்டன.

தவிர,யாழ்ப்பாணக் கோட்டை குடியேற்றவாதத்தின் ஓர் அடையாளம்.

எனினும் யாழ்ப்பாணக் கோட்டை, ஊர்காவற்றுறைக் கடல் கோட்டை என்பன எம் ஆளுகையில் இல்லாமல் படையினர் வசம் இருக்கிறதெனில், நாம் வெறுங்கையோடு நிற்பது தெரிகிறது.

என்ன செய்வது என்ற ஏக்கத்தோடு பாரதியாரின் வீட்டுப்படிகளில் இருந்து இறங்கினேன்.



தொடர்ந்து அருள்மிகு மணக்குள விநாயகர் ஆலயத்திற்குச் சென்றோம்.

மணக்குள விநாயகர் ஆலயம் பாரதியார் வழிபட்ட ஆலயம் என்ற ஞாபகப்படுத்தலோடு, மணக்குள விநாயகரைத் தரிசிக்கும் பேறு எனக்கும் கிடைக்கப்பெற்றது.




பாரதியார் வழிபட்டு வந்த மணக்குள விநாயகர் ஆலயம்

வழமை போல் ஆலயச் சூழலை வர்த்தக நிலையங்கள் ஆக்கிரமித்திருந்தன.

தவிர, வழிபாட்டில் அதிகளவான பக்தர்கள் பங்கேற்றிருந்தனர்.

மணக்குள விநாயகரைத் தரிசித்த மனநிறைவோடு அண்ணாசாலையில் உள்ள ராம் விடுதிக்குச் சென்றோம்.

இந்தத் தரிசிப்புக்களை எல்லாம் செய்வதற்கு கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். அவருடைய தொண்டர்கள் என்னுடன் கூட வந்திருந்தனர்.

கம்பவாரிதி மீது கொண்ட அளவு கடந்த பக்தி காரணமாக எம்மோடும் அவர்கள் மிகவும் அன்புரிமையோடு நடந்து கொண்டதை ஒரு போதும் மறந்து விட முடியாது.

அதிலும் குறிப்பாக உயர் வள்ளுவம் அறக்கட்டளையை ஸ்தாபித்து, அதன் மூலம் கம்பவாரிதியை தமிழ் நாட்டிற்கு அழைத்து, அங்கு திருக்குறள் விரிவுரையை நடத்துகின்ற செந்தில், அவருடன் இணைந்து செயலாற்றும் அமெரிக்காவில் தகவல் தொழில்நுட்பத் துறையில் கடமையாற்றிய சென்னையைச் சேர்ந்த இளங்கோ மற்றும் தாமோதரன், கம்ப வாரிதியின் உரைகளால் ஈர்க்கப்பட்டு ஆன்மீக நாட்டம் கொண்ட சேலத்தைச் சேர்ந்த வெங்கடேஷ், திருப்பூரைச் சேர்ந்த வேல்பாண்டி, சேலத்தைச் சேர்ந்த தினகரன் ஆகியோரின் பெருந்தன்மையும் அவர்களிடம் இருந்த இறை நாட்டமும் உண்மையிலேயே என்னை ஆச்சரியப்படுத்தின.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமைகள்...

ஹேரத் தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் நேற்றுச் செவ்வாய்க்கிழமை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தைச் சந்தித்தார்.

இதன்போது மனித உரிமைகள் தொடர்பான பரஸ்பர நலன் சார்ந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றதாக அமைச்சர் விஜித ஹேரத் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் பதிவிட்டிருப்பதாவது,

"தொடர்ச்சியான ஆக்கபூர்வமான ஈடுபாட்டிற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை நான் மீண்டும் வலியுறுத்தினேன். புதிய அரசாங்கம் பதவியேற்றதிலிருந்து நல்லிணக்க முயற்சிகள் மற்றும் மனித உரிமைகள் மீதான முன்னேற்றம் தொடர்பிலும் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரிடம் விளக்கினேன்" எனப் பதிவிட்டுள்ளார். (ம-7)

## ஜனநாயகத்...

மன்னார் நகர சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு நேற்று (24) காலை 11.30 மணியளவில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் மன்னார் நகர சபையில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சியின் உறுப்பினர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் டானியல் வசந்தன் ஆகியோரது பெயர்கள் முன்மொழியப்பட்டது.

இதன்போது சபையில் உள்ள 16 உறுப்பினர்களில் 15 உறுப்பினர்கள் வருகை தந்ததோடு, ஒரு உறுப்பினர் கலந்து கொள்ளவில்லை.

இதன்போது அதிக உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்பைக் கோரியிருந்தனர்.

இதன்போது தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சியின் உறுப்பினர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சனுக்கு 06 வாக்குகளும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்டானியல் வசந்தனுக்கு 08 வாக்குகளும் கிடைக்கப்பெற்ற நிலையில், கூடிய வாக்குகளைப் பெற்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் டானியல் வசந்தன் மன்னார் நகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆதரவு வழங்கி இருந்தது.

இந்த நிலையில் உப தவிசாளர் தெரிவு இடம்பெற்றது.

இதன்போது உப தவிசாளர் தெரிவிற்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் நூர் முகம்மது முகம்மது உசன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் சோமநாத் பிரசாத் ஆகியோரது பெயர்கள் முன்மொழியப்பட்டது. இதன்போது கூடுதலான உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்பை கோரியிருந்தனர்.

இதன்போது வாக்களிப்பில் இரண்டு உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர். வாக்களிப்பின்போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் நூர் முகம்மது முகம்மது உசன் 08 வாக்குகளையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் சோமநாத் பிரசாத் 05 வாக்குகளையும் பெற்ற நிலையில் கூடுதல் வாக்குகள் பெற்ற நூர் முகம்மது முகம்மது உசன் மன்னார் நகர சபையின் உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆதரவு வழங்கி இருந்தது. (ம-7,285)

## போர் நிறுத்தத்...

போர் நிறுத்தத்திற்கு இணங்கியுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிக்கை ஊடாக உறுதிப்படுத்தியுள்ளார்.

இதனிடையே, போர் நிறுத்தம் தற்போது ஆரம்பமாகியுள்ளதாக ஈரான் அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல் - ஈரான் இடையே அறிவிக்கப்பட்ட போர் நிறுத்தம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

போர் நிறுத்தத்தை மீற வேண்டாம் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## மன்னார்...

தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

22 உறுப்பினர்கள் கொண்ட மன்னார் பிரதேச சபையின் முதல் அமர்வு நேற்றைய தினம் மன்னார் பிரதேச சபை கேட்போர்கூட மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் இடம்பெற்றது.

தவிசாளர் தெரிவிற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் கிறிஸ்ரி றெவல் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஏ.ஜே.எம்.ஜப்ரான் ஆகியோரது பெயர்கள் முன்மொழியப்பட்டன.

பகிரங்கமாக நடைபெற்ற இந்த வாக்கெடுப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சி உறுப்பினர் கிறிஸ்ரி றெவலுக்கு ஆதரவாக 09 வாக்குகளும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஏ.ஜே.எம்.ஜப்ரானுக்கு ஆதரவாக 13 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

உப தவிசாளர் தெரிவிற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புஉறுப்பினர் றொயிட்டன் சாந்தினி குரூஸ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் இஸ்மாயில் முஹம்மது இஸ்ஸதீன் ஆகியோரது பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இதன் போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் றொயிட்டன் சாந்தினி குரூஸிற்கு 15 வாக்குகளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் இஸ்மாயில் முஹம்மது இஸ்ஸதீனுக்கு 07 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் மன்னார் பிரதேச சபையின் உப தவிசாளராக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் றொயிட்டன் சாந்தினி குரூஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ம-7,285)

## தீக்காயங்...

(வயது-60) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (22) இரவு மின் தடையேற்பட்டநிலையில் மெழுகுவர்த்தி ஏற்றியிருந்தபோது படுக்கையில் இருந்தவரின் ஆடையில் தீப்பிடித்ததில் தீக்காயங்களுக்குள்ளான அவர், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் திங்கட்கிழமை (23) இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)


மஹஜன சம்பத — திகதி 2025.06.24 — சீட்டிழுப்பு இலக்கம் 5870 — M 7 1 8 3 6 4
அத சம்பத — M 8 3 6 4 — சீட்டிழுப்பு இலக்கம் 445 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2025.06.24 — சீட்டிழுப்பு இலக்கம் - 1900 — G 19 28 45 72 G — Double Chance 51491

மெகா பவர் — திகதி 24/06/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2218 — K 03 24 39 41 57

NLB ஜய — திகதி 2025.06.24 — சீட்டிழுப்பு இலக்கம் 0138 — P 5 6 8 4

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4112 — சீட்டிழுப்பு திகதி 24.06.2025 — Q 32 53 64 78 — Q

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.06.24 — சீட்டிழுப்பு இலக்கம் 1179 — கும்பம் 27 51 56 62 கும்பம் — 42049 — 49

உத்தியோகபூர்வ முடிவுகள் — 24.06.2025 — வெற்றி வாரம் 578 — 0 — 2 0 2 2 9 2 — 89379 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,859,709.60 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2844 — சீட்டிழுப்பு திகதி 2025.06.24 — தினம் செவ்வாய்க்கிழமை — 20 34 57 72 I — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,486,228.80

சனிதா — திகதி 24.06.2025 — வெற்றி வாரம் 5005 — 13 52 59 63 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,107,417.20 — 81630

சசிரி — வெற்றி வாரம் 711 — சீட்டிழுப்பு திகதி 24.06.2025 — செவ்வாய்க்கிழமை — 02 14 32 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4556 — சீட்டிழுப்பு திகதி 24.06.2025 — தினம் செவ்வாய்க்கிழமை — 09 13 32 56 ரிஷபம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,540,731.20 — 190086


கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — H 18 15 27 49 55 — 2020 — 24.06.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.579,324,993.20

அத கோடிபதி — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 2670 — சீட்டிழுப்பு திகதி 2025.06.24 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,735,850.40 — 19 20 22 71 F — 618397


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பிரதாய பூர்வமாக கடமையைப் பொறுப்பேற்ற

## யாழ்.மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன்



யாழ் மாவட்ட அரச அதிபராக மருதலிங்கம் பிரதீபன் நேற்று (24) சம்பிரதாயபூர்வமாகக் கடமைகளைப் பொறுப் பேற்றுக்கொண்ட நிலையில் அவருக்கு சக ஊழியர்களால் சிறப்பு வரவேற்பும் அளிக்கப்பட்டது.

குறித்த பதவியேற்பு நிகழ்வு யாழ் மாவட்ட செயலகத்தில் மேலதிக மாவட்ட அரச அதிபர் ஸ்ரீமோகன் தலைமையில்

மதத் தலைவர்கள், மாவட்ட செயலக ஊழி யர்கள், பிரதேச சபையின் செயலர்கள் மற்றும் யாழ் மாவட்டத்தின் பல் துறைசார் பொறுப்பு நிலை அதிகாரிகள் பிரசன்னத்துடன் நடைபெற்றது.

முன்பதாக மாவட்ட செயலகத்துக்கு தனது பாரியாருடன் வருகை தந்த மாவட்ட செயலாளரை, மேலதிக மாவட்ட அரச அதிபர் ஸ்ரீமோகன் கைலாகு கொடுத்து மாலை அணிவித்து வரவேற்றிருந்தார்.

அதைத்தொடர்ந்து சக ஊழியர்களால் வரவேற்கப்பட்ட அரச அதிபர் பிரதீபன் மாவட்ட செயலரின் அதிகார பூர்வ அலுவலகத்தில் கடமைகளை பொறுப்பேற்றிருந்தார். (ம-7,33,104)

## சர்வதேச...

நேற்று மாலை கொழும்பில் நடைபெற்ற ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளருடனான சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தை வலியுறுத்தினார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், ஈழத் தமிழர்கள் மீது இலங்கை அரசால் திட்டமிட்ட வகையில் புரியப்பட்ட இனப்படுகொலைக்கும், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்யும் உள்ளகப் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்துவது இனமேலாதிக்கம் மிகுந்திருக்கும். இலங்கைத் தீவில் சாத்தியமற்றது என்பதால், பொறுப்புக்கூறலை உறுதிசெய்யும் வகையிலான சர்வதேச விசாரணைக்கு வழிசெய்யுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இலங்கை வந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரிடம் கோரியுள்ளார்.

இதன்போது, ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 47 உறுப்பு நாடுகளின் தலைவர்களுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன்; திருமலை மாவட்ட ஆயர் வண. நோயல் இம்மனுவல், வணபிதா ஆம்ஸ்ரோங் அடிகளார், சிவில் சமூக பிரதிநிதிகள் உள்ளிட்டோரின் கையொப்பங்களுடன் அனுப்பப்பட்ட 2021.01.15 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிட்ட விடயங்களை மேற்கோள்காட்டி தனது கோரிக்கையை முன்வைத்த சிறீதரன் எம்.பி, எழுத்து மூல கோரிக்கை ஒன்றையும் ஆணையாளரிடம் நேரிற் கையளித்துள்ளார்.

அந்தக் கோரிக்கைக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து, அடுத்தடுத்து ஆட்சி பீடம் ஏறிய அனைத்து அரசாங்கங்களும் சிங்கள-பௌத்த பெரும்பான்மை வாதத்தை நிறுவனமயமாக்கி, ஈழத்தமிழர்களின் அடையாளத்துவ வாழ்வை சிதைத்து, சுயாட்சி மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை அடியோடு இல்லாமற் செய்தன. இதற்காக நீண்டகாலம் ஈழத்தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட அமைதியான ஜனநாயக எதிர்ப்பு போராட்டங்கள் கொடூரமாக அடக்கப்பட்ட பின்னர், ஆயுத மோதல் ஏற்பட்டிருந்ததுடன், அதன் உச்சமாக 2009 மே மாதத்தில் முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை என்ற இனப் பேரவலம் நிகழ்ந்திருந்தது.

போருக்குப் பின்னரும் தமிழர் தாயகப் பகுதிகள் பெரிதும் இராணுவமயமாக்கப்பட்டு, நில அபகரிப்புகள், மக்கள் தொகை மறுசீரமைப்பு, பொருளாதார புறக்கணிப்பு மற்றும் கலாசார அழிப்பு என்பவை தமிழ்த் தேசியத்தை அழிப்பதற்கான ஆயுதங்களாக அரசாலும், அரச படைகளாலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போதைய ஆட்சியின் கீழும், இந்த அடக்குமுறை நடவடிக்கைகளை நிறுத்தவோ அல்லது மாற்றியமைக்கவோ புதிய அரசாங்கம் எந்த அர்த்தமுள்ள நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

மனித உரிமைகள் பேரவையின் 30/1 (2015) மற்றும் 46/1 (2021) தீர்மானங்கள் உள்ளிட்ட தொடர்ச்சியான தீர்மானங்களை ஏற்றுக்கொண்டாலும், அவை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளையும், செய்யப்பட்ட குற்றங்களின் வீரியத்தையும் ஈடுசெய்யத்தக்கவை யல்ல என்பதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். அதேவேளை இலங்கை அரசு OHCHR இன் OSLAP திட்டத்தை தடையின்றி அணுகுவதைத் தொடர்ந்து மறுத்து வருகிறது. இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் குறித்த ஆதாரங்களை சேகரிப்பதற்கான சர்வதேச முயற்சிகளையும் தடுக்கிறது.

இத்தகைய உள்ளக அரசியல் நிலைமாறுதல்களைக் கடந்து, ஐ.நா மனித உரிமைகள் பேரவையானது தீர்மானங்களுக்கு அப்பால் நகர்ந்து, தமிழினப் படுகொலை விவகாரத்தை ஐ.நா பொதுச் சபைக்கும், ஐ.நா பாதுகாப்பு பேரவைக்கும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கும் கொண்டு செல்லும் தெளிவான குறிக்கோளுடன் கூடிய சர்வதேச நீதிப் பொறிமுறை ஒன்றை செயற்படுத்த வேண்டுமென தங்களை தயவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நீதிக்கான பாதைகளை திறப்பதில் ஏற்படும் தாமதம், இலங்கை அரசுக்கும் தமிழினப் படுகொலையாளிகளுக்கும் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கான தைரியத்தை அதிகரிக்கும் சமநேரத்தில் ஈழத் தமிழர்கள் தங்கள் தாயகத்தில் ஒரு தேசமாக அழிக்கப்படுவதையும் துரிதப் படுத்தும் என்ற அடிப்படையில் நீதி, உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவை தாமதிக்கப்படாதிருப்பதை தங்கள் கொள்கை ரீதியான தலைமைத்துவம் உறுதிசெய்ய வேண்டும் என்றுள்ளது.(ம)

## உறவுகளை...

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளின் ஆணையாளரை, வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சந்தித்து, தமக்கான நீதி கோரி மகஜரையும் கையளித்துள்ளனர்.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற பொது அமைப்புக்களுடனான கருத்தரங்கின் முடிவிலேயே ஆணையாளர் வோல்கர் டர்க்கை சந்தித்து மகஜரைக் கையளித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பில் வடக்கு கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கப் பிரதிநிதிகளான லீலாதேவி, மீனலோசினி, சறோஜினி,அரியமலர்,சுகந்தி ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7)

## மாந்தை...

பிரேம்குமார் தெரிவானார்.

மாந்தை மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு நேற்று (24) பிற்பகல் 2.30 மணியளவில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் மாந்தை மேற்குப் பிரதேச சபையில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஞானப்பிரகாசம் பிரேம்குமார் மற்றும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் உறுப்பினர் செபமாலை கமலச்சந்திரன் ஆகியோரது பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இதன்போது சபையில் உள்ள 21 உறுப்பினர்களில் ஒரு உறுப்பினர் கலந்து கொள்ளவில்லை.

ஏனைய 20 உறுப்பினர்களும் கலந்து கொண்டு பகிரங்க வாக்கெடுப்பை கோரியிருந்தனர்.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் செபமாலை கமலச்சந்திரன் 05 வாக்குகளையும், ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஞானப்பிரகாசம் பிரேம்குமார் 15 வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிலையில் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் ஞானப்பிரகாசம் பிரேம்குமார் மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

இவருக்கு தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, தொழிலாளர் கட்சி ஆகியவை ஆதரவு வழங்கியது.

மேலும் உபதவிசாளர் தெரிவு இடம் பெற்ற போது, தேசிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்பினர் நிஸாம் நிஜாத் போட்டியின்றி உப தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.(ம-7,285)


உடனடி வேலை வாய்ப்பு

பருத்தித்துறையில் இயங்கி வரும் சூரியமஹால் திருமண மண்டபத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- சமையல் உதவியாளர்
  - றொட்டி போடத்தெரிந்தவர்
- சமையல் உதவியாளர்
  - வயது எல்லை 20-50
- உணவு பரிமாறுபவர் (Waiter)
  - வயது எல்லை 20-40

தொடர்புக்கு....
077 704 6623 077 881 1530
076 704 6623
(C-3263)

வீடு வாடகைக்கு வழங்கப்படும்

இல.106 பலாலி வீதி யாழ்ப்பாணத்தில் (இலுப்பையடி சந்தியில் இருந்து திருநெல்வேலிப் பக்கமாக 75 மீற்றர் தூரத்தில்) அமைந்துள்ள கீழ் வீடு மட்டும் வாடகைக்கு வழங்கப்படும்.
(3 அறை, சமையலறை, வரவேற்பு இடம், குளியலறை, தனியான அடிப்படை வசதிகள் ) உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.
மேல்வீட்டில் எவரும் இல்லை.வெளிநாட்டில் இருக்கும் வீட்டின் உரிமையாளர்கள் விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வரும்போது மேல் வீட்டினைப் பயன்படுத்துவார்கள்.

- வாடகை – மாதம் முப்பதாயிரம் (30000.00) ரூபா
- முற்பணம் – மூன்று இலட்சம் (300000.00) ரூபா.
- அரசாங்க உத்தியோகத்தர்கள் உள்ளடங்கிய சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

மேலதிக தொடர்புகளிற்கு :
0041 77 922 03 14
தயவுசெய்து WhatsApp ஊடாக குறுந்தகவல் மூலம் (Text Message) தொடர்புகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.
(1258)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3261) 076 825 7716 (ஆகாஸ்)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3262)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3960/-
11-16 Kg 2790/-
21-30 Kg 2650/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1400/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2500/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2260/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237
(C-3262)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org